முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 844

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.01.2022**, வியாழக்கிழமை

1. ஞான சக்தியே ஆறுமுக அரங்கா
ஞானிகள் துணைகொண்ட ஞான தேசிகா
வானவர்கள் போற்றுகின்ற மாதர்மத்தை
வாரிவழங்கி கலியுகத்தை காக்கவந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென உலகில் மாதர்மத்தை
வள்ளலாக நீ வழிநடத்தி வர
3. வருகின்ற தர்மமே தனி தவமாகும்
வரமென நீ தருகின்ற தீட்சையே
பேருலகில் உலகோர்க்கு பாதுகாப்பாகும்
பெருமைபட அரங்கன் உன் கரம்பட மக்கள் பெறுகின்ற
4. பெறுகின்ற ஆசியும் தீட்சையும்
பிரணவ சக்தியாக மக்களுக்கு காப்பு தரும்
தருகின்ற உன் அருளமுது தானும்
தரணியோர்க்கு பசிபிணி விரட்டுவதோடு
5. அதனோடு ஐயமற இனி பிறவாத
அரும்பெரும் பெரும்பேற்றை தரக்கூடும்
(துறையூர் ஓங்காரக்குடிலில் சமைக்கப்படும் உணவு பசியை தீர்க்கும், நோயை குணப்படுத்தும், கடவுள் ஆசியும் கிடைக்கும்)
பொருள்பட அரங்கனே முருகனே என
பூவுலகில் எங்கெல்லாம் நாமஜெபங்கள்
6. வருமுலகில் ஓங்காரமாக முழங்கப்படுகின்றதோ
வையகம் அங்கெல்லாம் சுத்தியாகக்கூடும்
கூடுமப்பா ஞானவான்கள் நிறைந்த பூமியாக குவலயம் அரங்கன் உன் வழிகாட்டலில்
நாடெங்கிலும் ஞானவான்கள் ஆட்சியும் ஞானிகளின் ஆட்சியும் ஞானசித்தர் காலமுமாக
7. ஆகவே மாற்றம் நடந்தேறும்
அரங்கனுள் யான் இருந்து இந்த அற்புதம் நடத்த
யுகமக்களே ஓங்காரக்குடில் நோக்கி வந்து
ஓங்காரஞான தீட்சை அரங்கன் வழி மக்கள் பெற

8. மக்கள் பெற இனிதே மாற்றம்
மண்ணுலகம் ஞானவழி காணக்கூடும்
ஆக்கமுடன் யான் அரங்கனுள் இருக்க
அரங்கனை காண்போர்க்கு ஆறுமுகன் என் காட்சியும் உறுதியாகும்
(துறையூர் ஓங்காரக்குடிலாசானை தரிசிக்கும்போது ஆறுமுகப்பெருமானின் காட்சியும் கிடைக்கும்)
ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—